## 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உண்மையானதும் நியாயமானதுமான நிலமைகளை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன்

நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 | | |
| (i) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல் தொடர்பில் நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த காலப்பகுதியில் ஒப்பீட்டு தகவல்கள் வெளிப்படுத்த வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது 2017 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடம் தொடக்கம் திருத்துகின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல் தொடர்பில் நியமத்தின் 110 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீராக்கும் போது கணக்கீட்டு கொள்கை மாற்றமடைதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட பெறுபேறானது மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்படவில்லை, 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 559,463 கூட்டுத்தொகை கடந்த வருடத்தின் சீராக்கமாக மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் பதிலு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடம் தொடக்கம் திருத்துகின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02<br>இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இருப்புக்கள் தொடர்பான நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு தொடர்பில் இனங்காணப்பட்டு வருமானக் கூற்றில் பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 426,518 தொகையான நட்டம் தொடர்பில் நியமத்தின் 36(எ) பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் வழங்கிய அறிவுரைகளின் பிரகாரம் செயற்படுகின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16<br>இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான நியமத்தின் 19(ஊ) பந்திக்கு முரணாக ஏரகம பட்டறையின் பழுதுபார்த்தலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் உள்ளடங்களாக பொது விடயங்களுக்கு செலவினமான ரூபா 108,854 கூட்டுத்தொகை நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கைகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய வற் வரி மீதியானது ரூபா 53,863,568 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய வற் வரித் தொகையானது ரூபா 53,744,967 ஆக பதிவு செய்யப்பட்டமையால் செலுத்த வேண்டிய வற் வரிக் கணக்கின் மீதியானது ரூபா 118,601 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கைகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி (ESC) மீதியானது ரூபா 12,904,494 ஆன போதிலும், | எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி தொகையானது ரூபா 11,002,254 ஆக பதிவு செய்யப்பட்டமையால் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி மீதியானது ரூபா 1,902,240 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய நிலுவை வருமான வரி மீதியானது ரூபா 16,276,328 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய செலுத்த வேண்டிய நிலுவை வருமான வரி மீதியொன்று காணப்படவில்லை. | எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |
| (ஈ) | 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய ரூபா 300,000 கூட்டுப்பெறுமதியுடைய வாகன வாடகை செலவினம், 2018 ஆம் ஆண்டின் வாகன வாடகை செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வாகன வாடகை செலவினம் அந்த பெறுமதியால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2017 நவம்பர், திசெம்பர் மாதங்களில் இந்த செலவினம் 2018 ஆம் ஆண்டிற்கான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவினங்கள் அந்த வருடத்திறாகன செலவினமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 இருப்பு வகைகளின் பெறுமதி ரூபா 11,441,948 ஆன போதிலும், 2019 பெப்ரவரி 12 ஆந் திகதிய பௌதீக மொய்மையாய்வுச் சபையின் அறிக்கைகளின் பிரகாரம் இந்த இருப்பு உருப்படிகளின் பெறுமதி ரூபா 9,954,930 ஆனமையால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்' மீதியானது ரூபா 1,487,018 இனால் கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | பரிசோதித்து எதிர்காலத்தில் திருத்தப்படும். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |
| (ஊ) | 2010 யூலை மாதம் முதல் 2011 திசெம்பர் மாதம் வரையிலும் ஊழியர் நலனோம்பல் நிதியத்திற்கான பங்களிப்பு செலுத்துவதிலான தாமதத்தின் | கணக்காய்வு அபிப்பிராயத்தினை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் நலனோம்பல் நிதியத்தினால் ரூபா 14,289,605 ஆன மிகைக்கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் அந்த மிகை அறவீட்டுத் தொகையானது ரூபா 7,896,291 ஆக பதிவு செய்யப்பட்டமையால் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணத் தொகையானது ரூபா 6,393,314 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2014, 2015 மற்றும் 2017 கணக்காண்டுகளில் கணக்காய்வு கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டு புத்தகத்தினை விநியோகிப்பதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்படாமையால், பற்றுச்சீட்டுகளை வழங்க முடியாதிருந்தது. அந்த வருடத்திற்குரிய ரூபா 592,432 கூட்டுதட்தொகையான செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அபிப்பிராயத்தினை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கையிருப்பிலுள்ள காசு | 150,199 | 88,275 | 61,924 | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதிருக்க பார்த்துக்கொள்கின்றேன். | பதிலின் அடிப்படையில் செயற்படல் பொருத்தமானதாகும். |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| விடயம் | | தொகை<br>ரூபா | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 23,755,784 | உரித்தினை சான்றுபடுத்துவதற்காக உரித்துறுதிகள் அல்லது ஏனைய சட்டரீதியான ஆவணங்கள். | மஹியங்கனை மற்றும் ஏரகம பட்டறைகள் நீங்களலாக ஏனைய சிறு பட்டறைகளின் காணிகளில் 44(i) பிரிவின் கீழ் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கூட்டுத்தாபனத்தின் பட்டறைகளுக்கு சொந்தமான காணிகளை சுவீகரித்தல் தாமதித்துள்ளதுடன், அவை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய வருமான வரி | 1,221,666 | வரி மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் | இது தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | தேடிப் பாரத்து கணக்காய்வுக்கு சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய மொத்த வரி | 110,766,085 | வரித் தொகையினை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் | கூட்டுத்தாபனத்திடமுள்ள கோவை முன்வைக்கப்பட்டுள்ளது. | இந்த பெறுமதிக்கான எழுத்டதுமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வியாபார மற்றும் ஏனைய கடன் பட்டோர். | 9,779,219 | கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள். | இந்த விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலின் பிரகாரம் நிதிக்கூற்றக்களில் இந்த பெறுமதி காணப்படுகின்றது. இதற்கான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | ஏனைய வைப்புகள் | 3,010,675 | சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள். | இந்த மீதியை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் பிரகாரம் திருத்தப்பட வேண்டும். |
| (ஊ) | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் பெற் வேண்டிய மீதிகள் | 5,000,000 | மீதி உறுதிப்படுத்தல் சான்றுகள். | மீதி உறுதிப்படுத்தல் கோரப்பட்டுள்ளது. | போதியளவான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (எ) | கடன் கொடுத்தோர் மீதிகள் | 48,138,780 | கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான எழுத்து மூல சான்றுகள் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 05 - தொழிற்சாலைகளின் வங்கி நடைமுறைக் கணக்கு | வங்கி இணக்கக்கூற்றுக்கள் | இவற்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது ஆகும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 52,753,241 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் 01 வருடத்திற்கு குறைவான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 714,556 தொகையும், 01 முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,276,046 தொகையும், 02 முதல் 03 வருடங்களுக்க இடைப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 500,012 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,262,627 ஆக இருந்ததுடன், நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படும் நிலுவைக் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதி இடர்களின் காரணமாக கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு தாமதமாகியுள்ளது. தேடிப்பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் தேடிப் பார்த்து செலுத்த வேண்டிய செலவினங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) பிரிவு | மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வருடாந்த பாதீடு முன்னைய வருடத்தினுள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 135 | நிதிப்பிரமாணம் தொடர்பான பணிகள் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டிருக்கவில் லை. | நிறுவனத்தினுள் இந்த பணிகளுக்காக போதியளவிலா ன பதவிநிலை உத்தியோகத்தர் கள் காணப்படவில்லை ல. | இந்த நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(1) பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ல. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிலின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திறகுரிய 06 பட்டறைகளுக்கு இணைப்பு செய்யப்பட்ட 13 வாகனங்கள் பயன்படுத்தப்படாத போதிலும், கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் கைத்தவிர்ப்பிற்காக அமைச்சின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டு ள்ளது. | பதிலின் அடிப்படையில் செயற்பட வேண்டும். |
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதிய இலக்கம் 03/2015 அரச நிதிச் சுற்றறிக்கை. | சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் பதவிநிலைத் தரமற்ற மற்றும் ஒப்பந்த பதவியணிக்கு ரூபா 446,000 கூட்டுத்தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | அன்றாட பணிகளை மேற்கொள்வதற் காக நாளாந்த அடிப்படையில் இணைத்துக்கொ ள்ளப்பட்ட ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டுள் ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 9.2 (பீ) மற்றும் (டீ) பிரிவுகள் | இந்த பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று மற்றும் நிறுவனத் திட்டமொன்று தயாரித்து, அரச முயற்சிகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 2010 யூலை | அமைச்சுடன் கலந்துரையாடி இது தொடர்பில் பதவியணியை அங்கீகரிப்பதற் கு நடவடிக்கை எடுக்கப்பட்டவா று உள்ளது. | இந்த சுற்றறிக்கையின பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 01 ஆந் திகதி மீள்கட்டமைப்பின் பின்னர் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | (ii) 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றல் அறிக்கையின் 03 மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட்டு காலாண்டொன்று நிறைவடைந்து 30 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் அரச முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு முன்வைக்க வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் தேடிப் பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (எ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை II ஆம் பிரிவு. | பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டினுள் 02 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு ரூபா130,000 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் பகள் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தருக்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் நாளாந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2018 பெப்தம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 01/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது குறித்த உத்தியோகத்தரின் பாவனைக்காக மாதமொன்றிற்கு ரூபா 150,000 படியான வாடகை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்து மீளாய்வாண்டினுள் ரூபா 1,800,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உரிய அதிகாரியால் புதிதாக வாகனமொன்றினை கொள்வனவு செய்வதற்கு அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கும் வரையிலும் மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 39,051,649 ஆன நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் இலாபம் ரூபா 37,077,618 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 76,129,267 ஆன வீழ்ச்சியொன்னுஅவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு தேறிய விற்பனை ரூபா 53,983,079 இனால் குறைவடைந்திருந்தமை மற்றும் ஏனை வருமானங்கள் ரூபா 4,230,894 இனால் குறைவடைந்தமைபிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் வருடாந்தம் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி அலகுகள் முறையே 2,162,836 முதல் 4,368,412 வரையிலும் முறையாக அதிகரித்திருந்தது. எனினும், அஸ்பன்டஸ் தடையினை அகற்றப்பட்டமையும், கம்பனியின் ஓடுகளின் விற்பனை குறைவடைந்தமையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டின் போது உற்பத்தி அலகுகள் 1,642,804 ஆனமையால் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக உற்பத்தி அலகுகள் 2,725,608 இனால் அதாவது 62 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | ஓடு உற்பத்தி குவிந்தமை மற்றும் ஓடுகளுக்கான கேள்வி குறைவடைந்தமையின் அடிப்படையில் 2018 சனவரி 25 முதல் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அது மொத்த உற்பத்தி குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. | அரச கொள்கைத் தீர்மானமொன்றாக வழங்கிய அறிவுரைகளின் பிரகாரம் பற்றரையினை குத்தகைக்கு வழங்குவதற்கு துரதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். திறைசேரியின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது ஆகும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் சனவரி மாதம் முதல் 05 தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், ஓடுகளின் விற்பனையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ஏரகம பட்டறை தவிர ஏனைய 04 பட்டறைகளின் 2018 சனவரி 25 ஆந் திகதி முதல் தற்காலகமாக உற்பத்தி இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2017 | ஓடுகளின் விற்பனையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக மற்றும் அஸ்பன்டஸ் தடை நீக்கப்பட்டமையின் அடிப்படையில் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. நிறுவனத்தில் 2018 ஆம் ஆண்டினுள் ஓடு விற்பனையிலான பிரச்சினைகள் காரணமாக உற்பத்தி இடைநிறுத்தப்பட்டுள்ளது. | அமைச்சினூடாக நேரடி தலையீட்டின் அடிப்படையில் அரச கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது ஏரகம பட்டறை 18 சதவீதத்தினாலும், மஹியங்களை பட்டறை 90 சதவீதத்தினாலும், யட்டியன பட்டறை 92 சதவீதத்தினாலும், பிங்கிரிய பட்டறை 94 சதவீதத்தினாலும் மற்றும் உஸ்வெவ பட்டறை 96 சதவீதத்தினாலும் உற்பத்தி இயலளவு மீளாய்வாண்டின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. | | |
| (இ) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை வருமானத்தினை ஒப்பீடு செய்யும் போது ஏரகம தொழிற்சாலை 28 சதவீதத்தினாலும், பிங்கிரிய தொழிற்சாலை 51 சதவீதத்தினாலும், மஹியங்கனை தொழிற்சாலை 69 சதவீதத்தினாலும், யட்டியன தொழிற்சாலை 68 சதவீதத்தினாலும் மற்றும் உஸ்வெவ தொழிற்சாலை 72 சதவீதத்தினாலும் விற்பனை குறைவடைந்திருந்தது. | அஸ்பன்டஸ் தடை நீக்கப்பட்டமையின் அடிப்படையில் மற்றும் உற்பத்தி விற்பனையில் ஏற்பட்ட சிக்கல்களின் அடிப்படையில் இது இடம்பெற்றுள்ளது. | உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளில் ஏற்பட்ட சேதத்திற்கு முன்னர் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலைகயில் 04 தொழிற்சாலைகள் மூலப்பொருட்களின் பற்றாக்குறை, வட கிழக்கில் அஸ்பன்டஸ் தடை நீக்கப்பட்டமையின் அடிப்படையில் நிலவிய யுத்தம் மற்றும் மீள்கட்டமைத்தலின் அடிப்படையில் ஊழியர்கள் அகற்றப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மூடப்பட்டிருந்தது. அந்த பட்டறைகளின் உற்பத்தி | இந்த தொழிற்சாலைகளுக்கு பொருத்தமான செயற்திட்டங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை பாதுகாப்பதற்கும் துரிதமாக பயனுள்ள முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் 04 முதல் 26 வருடங்கள் வரையான காலமான நிறுத்தப்பட்டுள்ளன. அந்த 04 பட்டறைகளுக்குரிய ரூபா 17,517,840 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள், 88 ஏக்கர்கள் 02 ரூட் பரப்பளவான காணி ஆகியன பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஆ) | சபைக்கு சொந்தமான தொழிற்சாலைகளை நீண்ட காலமாக தனியார் குத்தகையாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கும் பிரதான நோக்கத்தில் அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நீக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டின் யூலை 01 ஆந் திகதி முதல் உரிய அதிகாரயொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மீளாய்வாண்டு வரையிலும் உரிய அதிகாரிகள் 03 பேர் கால அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தொழிற்சாலைகள் எதனையும் குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இந்த தொழிற்சாலைகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் அடிப்படையில் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. துரிதமாக பட்டறைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையின் கீழுள்ள ஏரகம பட்டறைக்குரிய 50 ஏக்கர் பரப்பளவான வயல் காணி, 2018 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் விளைச்சலுக்கு உட்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த வயல் காணிகள் ஆக்கபூர்வமான முதலீட்டு நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு 245,572 பொறியியல் செங்கற்கள் ரூபா 4,051,938 தொகைக்கு விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே இணக்கப்பாட்டு உடன்படிக்கைக்கு 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 57,157 செங்கல்கள் அல்லது மொத்தக் கட்டளையில் 23 சதவீதம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.3 இன் பிரகாரம் உடன்படிக்கையின் செல்லுபடியான காலத்தினை நீடிப்பு செய்வதற்கு அல்லது புதிய உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காது எஞ்சிய செங்கல் விநியோகமானது 2019 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி முன்னைய ஆண்டில் பெற்றுகொள்ளப்பட்ட கட்டளைகள் அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு மீளாய்வாண்டின் முதல் காலாண்டுகள் 03 இற்காக மாத்திரம் உள்ளக கணக்காய்வு திட்டமொன்றினை தயாரித்திருந்ததுடன், அந்த திட்டத்தின் முலம் 10 துறைகளை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், ஆண்டினுள் 04 துறைகள் மாத்திரம் உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வின் செயற்படு நிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | எதிரகாலத்தில் அறிவுரைகள் மற்றும் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த கணக்காய்வு திட்டமொன்றிழன தயாரிக்க வேண்டிய போதிலும், அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |